## சுருக்கம்

ஈரோடு மாவட்டம் - அந்தியூர், சத்தியமங்கலம், தாளவாடி ஆகிய வருவாய் வட்டங்களில் உள்ள குறிப்பிட்ட பகுதிகள் மலைப்பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது - ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கு மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நிதி (படிகள்)த் துறை

அரசாணை (நிலை) எண்.338 நாள். 07.11.2024

ஐப்பசி -21

திருவள்ளுவர் ஆண்டு -2055.

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.503, வனம் மற்றும் மீன்வளத் துறை, நாள்: 29.04.1983.
2. அரசாணை (நிலை) எண்.49, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்: 24.03.2003.
3. அரசாணை (நிலை) எண்.306, நிதி (ஊதியக் குழு)த் துறை, நாள்: 13.10.2017.
4. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கடித எண்.26777/2017/எ2, நாள். 25.11.2020, 03.05.2021 மற்றும் 09.05.2024.

-oOo-

**ஆணை:**

மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில், ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம், தாளவாடி மற்றும் அந்தியூர் ஆகிய இடங்களை ஏற்கெனவே மலைப்பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், அரசினால் மலைப்பகுதிகள் என அறிவிக்கை செய்யப்பட்ட இடங்களான தாளவாடி வட்டத்தில் அமைந்துள்ள அனைத்து வருவாய் கிராமங்கள் மற்றும் சத்தியமங்கலம் வட்டத்திலுள்ள குன்றி, குத்தியாலத்தூர், திங்களூர், கூத்தம்பாளையம்

Newsupdate

கிராமம் மற்றும் அந்தியூர் வட்டத்தில் உள்ள பர்கூர் அ, பர்கூர் ஆ கிராமங்கள் ஆகிய மலைப்பகுதிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி வழங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, மலைவாழ்படியானது அரசு அலுவலர்களுக்கு அடிப்படை ஊதியத்திலிருந்து 20 சதவிகிதம் தொடர்ந்து வழங்கப்பட்டு மாதம் ஒன்றிற்கு ரூ.1,500/-லிருந்து ரூ.6,000/-ஆக உயர்த்தி வழங்கியும், குளிர்காலப்படி பெறுவதற்கு கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் முதல் 1499 மீட்டர் வரையிலான மலைப்பகுதிகளுக்கு அடிப்படை ஊதியத்தில் 5 சதவிகிதம் என அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு ரூ.1,200/- (4 மாதத்திற்கு) மற்றும் 1500 மீட்டருக்கு மேற்பட்ட மலைப் பகுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 10 சதவிகிதம் என அதிகபட்சமாக மாதம் ஒன்றிற்கு ரூ.1,500/- (4 மாதத்திற்கு) பெற ஆணையிடப்பட்டுள்ளது.

4. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், அந்தியூர் மற்றும் தாளவாடி ஆகிய இடங்களில் உள்ள மலைப்பகுதிகளுக்கு மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி பெற தகுதியுள்ள மலைப் பகுதிகளின் (above 1000 Mean Sea Level மற்றும் above 1500 Mean Sea Level) விவரங்களை அரசுக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்து மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>சத்தியமங்கலம் வட்டம்</u>

| மலைப்பகுதிகள் | மலைவாழ்படி பெற தகுதி | குளிர்காலப்படி பெற தகுதி (1000 MSL மற்றும் 1500 MSL மேல் மட்டும்) |
|---|---|---|
| குத்தியாலத்தூர் (கடம்பூர்) | ஆம் | ஆம் |
| குன்றி | ஆம் | ஆம் |
| கூத்தம்பாளையம் (மாக்கம்பாளையம்) | ஆம் | இல்லை |
| பவானிசாகர் வனச்சரகம் | ஆம் | ஆம் |
| சத்தியமங்கலம் வனச்சரகம் | ஆம் | ஆம் |
| தூ.நா.பாளையம் வனச்சரகம் | ஆம் | ஆம் |
| திங்களூர் (கேர்மாளம்) | ஆம் | ஆம் |

அந்தியூர் வட்டம்

| மலைப்பகுதிகள் | மலைவாழ்படி பெற தகுதி | குளிர்காலப்படி பெற தகுதி (1000 MSL மற்றும் 1500 MSL மேல் மட்டும்) |
|---|---|---|
| பர்கூர் அ | ஆம் | ஆம் |
| பர்கூர் ஆ | ஆம் | ஆம் |

ஆசனூர் வனக் கோட்டம்

தாளவாடி வட்டம்

| மலைப்பகுதிகள் | மலைவாழ்படி பெற தகுதி | குளிர்காலப்படி பெற தகுதி (1000 MSL மற்றும் 1500 MSL மேல் மட்டும்) |
|---|---|---|
| பையனபுரம் | ஆம் | ஆம் |
| கேர்மாளம் | ஆம் | ஆம் |
| ஆசனூர் | ஆம் | ஆம் |
| இக்கலூர் | ஆம் | ஆம் |
| மல்லன்குழி | ஆம் | இல்லை |
| நெய்தாளபுரம் | ஆம் | இல்லை |
| தலமலை | ஆம் | ஆம் |
| திகினாரை | ஆம் | இல்லை |
| தாளவாடி | ஆம் | இல்லை |
| அருள்வாடி | ஆம் | இல்லை |
| எரகணஹள்ளி | ஆம் | ஆம் |
| பனகனஹள்ளி | ஆம் | இல்லை |
| தொட்டமுதுகரை | ஆம் | இல்லை |
| கெட்டவாடி | ஆம் | ஆம் |
| கொங்கள்ளி | ஆம் | இல்லை |
| மனூர் | ஆம் | இல்லை |
| தொட்டகாஜனூர் | ஆம் | இல்லை |
| சிக்கன் காஜனூர் | ஆம் | இல்லை |
| கரளவாடி | ஆம் | இல்லை |
| மாதஹள்ளி | ஆம் | ஆம் |

5. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசிலனை செய்து, அதனை ஏற்று, ஈரோடு மாவட்டத்தில் ஆசனூர் வனக்கோட்டம், சத்தியமங்கலம்

மற்றும் அந்தியூர் மலைப்பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள மலைப்பகுதிகளில் (above 1000 Mean Sea Level மற்றும் above 1500 Mean Sea Level) மலைவாழ்படி 01.10.2024 முதல் மற்றும் குளிர்காலப்படியை நவம்பர் முதல் பிப்ரவரி வரை ஒவ்வொரு ஆண்டிற்கும் நவம்பர் 2024 முதல் பார்வை மூன்றில் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளவாறு வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயச்சந்திரன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்.
ஈரோடு மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை-18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை-9.
ஆணையர், கருவூலக் கணக்குத் துறை (FAC), சென்னை-35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் - (I, II, III), சென்னை-09.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கூடுதல் தலைமைச் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலைமாற்றத் துறை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நிதித்துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-09.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**-/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-**

7/11/2024
**பிரிவு அலுவலர்**

Newsupdate